1992 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 635. திருமதி கே.எம். கலைச்செல்வி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்,

635—

ராஜாதோப்பு அணை கட்டும் திட்டம்,

* 4009 திருமதி கே, எம், கலைச்செல்வி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காட்பாடி தொகுதியில் ராஜாதோப்பு அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இராசாதோப்பு கானார் திட்டம் அரசு ஆணை 28–5–1990-ல் ரூ. 251 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளித்து வேலைகள் 1990–91 ஆம் ஆண்டிலேயே துவக்கப் பெற்று, நடை பெற்று வருகின்றன,

(ஆ) இத்திட்டம் 1993–ஆம் ஆண்டில் நிறைவுறுமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

முற்பகல் 9-55

திருமதி கே. எம், கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராஜாத்தோப்பு நீர்த் தேக்கம் என்பது செஞ்சி ஊராட்சிக்கருகில் அமைந்துள்ள முக்கியமான திட்டமாகும். இத்திட்டம் 27.5 மில்லியன் கன அடி தண்ணீர் கொள்ளளவு கொண்டதாகும், இத்திட்டத்தின் மூலம் 500.05 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறும் வாய்ப்புள்ள நிலை ஏற்படும். பாசன வசதி பெறாமல் விடப்பட்ட மீதமுள்ள 42 ஏக்கர் நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 251 லட்சமாகும், இதன் மூலமாக ஆண்டொன்றுக்கு 274 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்திற்காக 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். அதற்காக காட்பாடி தொகுதி வாழ் மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி

யைத் தெரிவித்துக் கொள்கிறேன், அமைச்சர் அவர்கள் இப்போது அங்கே பணிகள் நடைபெறுவதாகக் குறிப்பிட்டார்கள். தற்போது அங்கு பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் ஆட்சிக் காலத்திலே காட்பாடி தொகுதிவாழ் விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மையைக் கருதி, பலசட்டமன்ற உறுப்பினர்களாலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் தொடர்ந்து வலியுறுத்திவரும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்து, அந்த திட்டத்தின் நிறைவு விழாவையும் மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் நடத்தித் தரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொண்டு, அதை விரைவில் முடிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே அணைத்திட்டம் நடைபெறவில்லை என்ற தவறான ஒரு தகவலைச் சொல்லியிருக்கின்றார். ஒரு அணை கட்டுகின்ற போது அதற்கு பூர்வாங்க வேலைகள் என்று சொல்லப்படுகின்ற அடிப்படைப் பணிகளை இந்த அரசு முதலில்எடுத்துக்கொள்கிறது. அதற்குப் பின்னாலேதான், அணை கட்டுகின்ற பணிகளை நாம் துவங்குகிறோம். இத்திட்டத்தைப் பொறுத்தவரை, இன்னும் 17½ ஏக்கர் நிலத்தை வனத் துறையிடமிருந்து நாம் கையகப் படுத்த வேண்டியுள்ளது. ஆனால் அதற்கு முன்னதாக கட்டிடங்கள், அதாவது பணியாளர்கள் குடியிருப்புகளையும் அலுவலகங்களையும் கட்டும் பணிகள் நடக்கின்றன. ஒரு அணை கட்டுகின்ற நேரத்தில் முதலில் அதைத்தான் துவங்குகிறோம். அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வனத் துறை நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் இந்த அணையின் வேலைகள் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 636, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

636—

பாலம் கட்டுதல்.

*4065 திரு. தி. சாத்தையா:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காமராஜர் மாவட்டம், இராஜபாளையம் தொகுதியில் புத்தூர் அருகே இணைப்பு சாலையில் பாலம் கட்ட திட்டம் ஆய்வு செய்யப்பட்டுள்ளதை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பாலம் கட்டும் வேலைகள் எப்போது தொடங்கும்?